Australian Government

Department of Health

# TGA எனப்படும் 'மருத்துவ-சிகிச்சை சரக்குகள் நிர்வாகம்' 'கோவிட்-19' தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதற்கான தன்னம்பிக்கையை ஆஸ்திரேலியர்களுக்கு அளிக்கவுள்ளது

'கொரோனா வைரஸ்' பெருந்தொற்றுடன் போரிடுவதில் 'கோவிட்-19' தடுப்பூசிகள் பெரும் பங்கு வகிக்கும்.

ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்படுவதற்காக 'கோவிட்-19' தடுப்பூசிகளை மதிப்பீடு செய்து அங்கீகாரம் அளிக்கும் பொறுப்பினை 'ஆஸ்திரேலிய மருத்துவ-சிகிச்சைச் சரக்குகள் நிர்வாகம்' (Australia's Therapeutic Goods Administration (TGA)) எனும் அமைப்பு கொண்டுள்ளது. தடுப்பூசியாகப் பயன்படுத்தப்படக்கூடிய மருந்து ஒன்றின் ஆதாயங்கள் மற்றும் ஆபத்துகள் அனைத்தையும் TGA கருத்தில் கொள்ளும். தடுப்பூசிகளின் பாதுகாப்பு மற்றும் செயலூக்கம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கான TGA-யினது செயல்பாட்டு முறைகள் கறாரானவை, பரந்த வீச்சுடையவை மற்றும் சுயாதீனமானவை.

ஆனால், TGA என்பது தனித்து இயங்கும் அமைப்பல்ல. உலகெங்கும் உள்ள தம்மையொத்த 'ஒழுங்குறுத்து' அமைப்புகளுடன் TGA நெருக்கமாய்ப் பணியாற்றுகிறது. அனைவருக்கும் பயன்படக்கூடிய விதத்தில் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் விதமாக இந்த அமைப்புகள் தினந்தோறும் ஒத்துழைப்பாய்ச் செயல்படுகின்றன.

தடுப்பூசி ஒன்றிற்கு அங்கீகாரம் அளிக்கலாமா என்று தீர்மானிப்பதற்காகக் கிடைக்கும் அனைத்து விஞ்ஞான மற்றும் மருத்துவத் தகவல்களையும் TGA மதிப்பீடு செய்து வருகிறது. தடுப்பூசிகளை உருவாக்கும் நிறுவனத்தார் மற்றும் கிடைக்கும் இதர ஆதாரங்கள் மூலமாக இந்தத் தகவல்கள் வருகின்றன.

மருத்துவ முயற்சிகளின் போதும், அவற்றிற்குப் பிறகும் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பாகவும் செயலூக்கமாகவும் இருக்கும் தடுப்பூசி ஒன்றை மட்டுமே நாங்கள் அங்கீகரிப்போம். உயர்ந்த தரத்திலும், அனைத்து வேளைகளிலும் ஒரே மாதிரியானதாக இருக்கும் விதத்திலும், கட்டுப்படுத்தப்படும் விதத்திலும் தயாரிக்கப்பட முடியும் என்பதைத் தடுப்பூசி உருவாக்குனர்கள் நிரூபிக்க இயலுமாயிருப்பது முக்கியம்.

TGA அமைப்பானது தடுப்பூசி ஒன்றை அங்கீகரித்தால், அது 'கோவிட்-19'-இற்கு எதிராகச் செயலாற்றும் என்று நீங்கள் நம்பலாம். மிகவும் தீவிரமான நோய்க்கு ஆளாபவர்கள் மற்றும் இந்த வைரஸ்-இன் காரணமாக இறப்பவர்கள் ஆகியோரது எண்ணிக்கையை இந்தத் தடுப்பூசி குறைக்கும்.

அங்கீகாரத்திற்கு அடுத்தும் எமது பங்கு தொடரும். தடுப்பூசிப் பாதுகாப்பினை நாங்கள் தொடர்ந்து உன்னிப்பாய்க் கண்காணித்து வருவோம், அத்துடன் ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு தடுப்பூசித் தொகுதியின் தரத்தையும் தொடர்ந்து மதிப்பீடு செய்துவருவோம்.

எமது அதியுயர் முந்துரிமையாக, 'கோவிட்-19' தடுப்பூசிகளின் முழு மீளாய்வு ஒன்றினை TGA நடத்திவருகிறது - ஆனாலும் வழக்கமாக ஆகும் காலத்தை விடக் குறுகியதொரு காலவரையறையில் இவ்வாறு செய்யப்படுகிறது.

தடுப்பூசிகளில் மக்கள் பெரும் நம்பிக்கை வைப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் ஆஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்படும் அணுகுமுறை அமையும். ஆகச் சிறந்த பொது சுகாதாரப் பலன்களை இது சாதிக்கும்.

நமது தர-நிலைகளை விட்டுக்கொடுக்காமல் தடுப்பூசிகளை மதிப்பீடு செய்யும் செயல்பாட்டு முறைகளைத் துரிதப்படுத்த நம்மால் இயன்றது எப்படி? தடுப்பூசி உருவாக்குனர்களிடமிருந்து வந்துகொண்டிருக்கும் தரவுகளை TGA தொடர்ந்து ஏற்றுக்கொண்டுவருகிறது. கேள்விகள் எதற்கும் விரைவான பதில்களைப் பெறுவதற்காக நாங்கள் அவர்களுடன் இணைவாய்ப் பணியாற்றிவருகிறோம்.

தடுப்பூசி சமர்ப்பிப்புகளின் வெவ்வேறு பகுதிகளை மதிப்பீடு செய்வதற்கென வெவ்வேறு அணியினர் எம்மிடம் உள்ளனர். தடுப்பூசி ஒழுங்குறுத்து மீளாய்வுகள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றிய பணிகளை மேற்கொள்பவர்களது எண்ணிக்கையையும் நாங்கள் அதிகரித்துள்ளோம். சமீபத்திய விழாக் காலத்தில் கூட எமது அர்ப்பணிப்பு மிக்க வல்லுன அணியிணர் பணியாற்றினர்.

தடுப்பூசி ஒன்றை மதிப்பீடு செய்யும்போது ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட தரவுகளையும், தகவல்களையும் TGA அமைப்பினர் கருத்தில் கொள்கின்றனர் என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். அப்படி நாங்கள் உற்று நோக்குவது எதை?

தடுப்பூசிகளின் செயலூக்கம் உள்ளடங்க, ஆய்வுக்கூட சூழல் ஒன்றில் நாங்கள் அனைத்து விடயங்களையும் நோக்கிவருகிறோம். உற்பத்திச் செயல்முறைகளை நாங்கள் நோக்கிவருகிறோம். மருத்துவர்களுடைய சிகிச்சை-நிலையங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் செல்லும் உற்பத்திப் பொருட்கள் அடங்கிய குப்பிகளையும், அத்துடன் மருத்துவ முயற்சிகளிலிருந்து கிடைக்கும் தரவுகளையும், பாதுகாப்பு குறித்த விலாவரியான தகவல்களையும் நாங்கள் நோக்கிவருகிறோம்.

அதியுயர் முந்துரிமையுள்ள ஆஸ்திரேலியக் குழுக்களுக்கு ஃபிப்ரவரி மாதத்தின் மத்தியில் இருந்து மாத இறுதிக்குள் தடுப்பூசிகள் அளிக்கப்படுவதைத் துவங்கலாம் என்று ஆஸ்திரேலிய அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இந்தத் தடுப்பூசிகள் பாதுகாப்பானவை, செயலூக்கம் மிக்கவை மற்றும் எமது கறாரான தர-நிலைகளைப் பூர்த்தி செய்பவை என்பதை ஆஸ்திரேலிய மக்களுக்கு உறுதிப்படுத்துவது TGA-யில் உள்ள எமது பணியாகும்.

**ஆக்கம் - இணைப் பேராசிரியர் ஜான் ஸ்கெரிட், தலைவர், 'மருத்துவ-சிகிச்சை சரக்குகள் நிர்வாகம்' (By Adjunct Professor John Skerritt, who leads the Therapeutic Goods Administration.)**